# E – News Letter 2018-2019









Published in February 2019

Compiled by

**THE ROTARY CENTRAL VIDYARAMBAM NURSERY AND PRIMARY SCHOOL**

**NAGAPATTINAM**

# நிகழ்வுகள்

- 04.06.2018 அன்று 2018-2019 ஆண்டிற்கான பள்ளி திறப்புவிழா நடைப்பெற்றது.



- ஜுன் 12, 2018 அன்று **திருமதி. பிரேமா மேடம், திருமதி. ஸ்ரீமதி மேடம்** அவர்கள் இந்த கல்வி ஆண்டிற்கான பாட செயல்பாடுகள், குறிப்புகள் மற்றும் பொறுப்புகள் போன்றவற்றை செயல் படுத்தினார்கள்.



- ஜுலை 02, 2018 முதல் ஜுலை 06, 2018 வரை வனமகா உற்சவ வாரம் அனுசரிக்கப்பட்டது.

- ஜுலை 06, 2018 அன்று சிறப்பு விருந்தினராக முன்னாள் **தலைமையாசிரியர் முத்தமிழ் ஆனந்தன்** அவர்களும் **தோட்டக்கலை நிபுணர் S. நீதிமாணிக்கம்** அவர்களும் கலந்துக்கொண்டனர். குழந்தைகள் அனைவரும் மரம் நடுவதற்கான அவசியத்தையும், செடி கொடிகளுக்கும் மனிதர்களுக்கும் உண்டான தொடர்பையும், சுற்று சூழலை பாதுகாப்பது, பசுமையாக்குவது எப்படி என ஆடல், பாடல், நாடகம் ஆகிய பல்வேறு கலை நிகழ்ச்சிகள் மூலம் விளக்கினர்.

- ஜுலை 16, 2018 அன்று காமராசர் பிறந்த நாளை முன்னிட்டு கல்வி வளர்ச்சி நாள் கொண்டாடப்பட்டது. காமராசரின் கல்வி சிந்தனைகள், கல்விக்கும் தொழில் வளர்ச்சிக்கும் அவர் ஆற்றிய அரும்பணிகள், அவரால் கொண்டுவரப்பட்ட பல்வேறு நலத்திட்டங்கள் பற்றி ஆசிரியர்கள் மாணவர்களுடன் கலந்துரையாடினர்.



- ஆகஸ்ட் 15, 2018 அன்று 72வது ஆண்டு சுதந்திரதின விழா மூத்த குடிமக்கள் மற்றும் மாணவர்களுடன் சிறப்பாக நடைபெற்றது. பின்னர் அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டன.

- ஆகஸ்ட் 23, 2018 மற்றும் ஆகஸ்ட் 24, 2018 ஆகிய தினங்களில் ஆசிரியர்களுக்கு சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டது. தாளாளர் மற்றும் சிறப்பு பயிற்சியாளர் பாடத்திட்ட முறைகளை ஆசிரியர்களுடன் விவாதித்தனர்.





- ஆகஸ்ட் 27,2018 அன்று அறக்கட்டளையின் நிறுவனர் மறைந்த திரு. V. ரெங்காநாதன் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு சர்க்கரை பொங்கல் வழங்கப்பட்டது



- ஆசிரியர் தினமான செப்டம்பர் 05, 2018 அன்று குழந்தைகள் அனைவரும் தங்கள் ஆசிரியரிடமிருந்து ஆசிர்வாதங்களை பெற்றுக்கொண்டனர். அனைத்து ஆசிரியர்களுக்கும் இனிப்புடன் நினைவுப்பரிசுகளும் வழங்கப்பட்டன.

- செப்டம்பர் 21, 2018 அன்று நாகை மாவட்டத்தில் உள்ள பள்ளிகளில் சிறந்த ஆசிரியர்களை தேர்ந்தெடுத்து விருதினை **கைத்தறி மற்றும் துணி நூல்துறை அமைச்சர் திரு.O.S.மணியன்** அவர்கள் வழங்கினார். அதில் நமது பள்ளி **தலைமை ஆசிரியை திருமதி.S.கார்த்திகா** மற்றும் **ஆசிரியர் செல்வி.G.ராஜலெட்சுமி** அவர்கள் விருதினை பெற்றார்கள்.





- அக்டோபர் 03, 2018 காந்தி ஜெயந்தி விழா கொண்டாடப்பட்டது. **பள்ளி பணியாளர்களுக்கு கைத்தறி நெசவுப்புடவைகள் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள்.**

- அக்டோபர் 13, 2018 அன்று ஆசிரியர்களுக்கு இரண்டாம் பருவத்திற்கான பயிற்சி வழங்கப்பட்டது.





- அக்டோபர் 23, 2018 **ஆனந்தம் அறக்கட்டளையை சேர்ந்த திருமதி. லதா மற்றும் திரு. பாலசுப்ரமணியன் அவர்கள்** பள்ளிக்கு விஜயம் செய்தார்கள். மாணவர்களின் செயல்பாடுகள், பள்ளியின் செயல்பாடுகளை பார்த்து பாராட்டிச் சென்றனர்.

- அக்டோபர் 25, 2018 **திரு. புகழேந்தி வட்டார கல்வி அலுவலர்** அவர்கள் பள்ளியை பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

- அக்டோபர் 31, 2018 நமது வித்யாரம்பம் பள்ளியின் சார்பாக அனைத்து மாணவர்களுக்கும் நிலவேம்பு கசாயக் குடிநீர் வழங்கபட்டது.



- நவம்பர்14, 2018 அன்று நமது பள்ளியில் குழந்தைகள் தினவிழாவை முன்னிட்டு செயல்திட்ட நாள் (Project day) கொண்டாடப்பட்டது. இதில் 3 முதல் 5 –ம் வகுப்பு வரை உள்ள அனைத்து மாணவர்களும் கலந்து கொண்டு தங்களின் கண்டுபிடிப்புகளையும் பல்வேறு கணித, அறிவியல் செயல்பாடுகளையும் செய்து காட்டினார்கள். அருகில் உள்ள சாமந்தான்பேட்டை அரசுப்பள்ளி மாணவர்கள் நமது பள்ளிக்கு விஜயம் செய்து எல்லா செயல்பாடுகளிலும் பங்கேற்றனர். அவர்களுக்கு கடலை மிட்டாய் வழங்கபட்டது.



மதியம் மாணவர்கள் பாடல், நாடகம், பேச்சு போன்ற நிகழ்ச்சிகளில் பங்கேற்றனர். இந்நிகழ்ச்சியில் **பள்ளி முதல்வர். திருமதி. T.கார்த்திகா சீர்காழி திட்ட ஒருங்கிணைப்பாளர் திருமதி. G.ராதிகா, சீர்காழி அலுவலக பணியாளர் திருமதி. B.சரிதா** அவர்களும் கலந்துக் கொண்டு விழாவினை சிறப்பித்தார்கள். இறுதியில் நம்பள்ளி மாணவர்களுக்கும் கடலை மிட்டாய் வழங்கப்பட்டது.

- நவம்பர் 15, 2018 நாகை மற்றும் அதன் சுற்றியுள்ள பகுதிகளில் கஜா புயல் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. நமது பள்ளியில் மரங்கள், செடிகள், பள்ளியின் மேற்கூரை போன்றவைகள் பாதிப்படைந்தன. Ullas Trust இல் பணிபுரியும் **திருமதி. சுகன்யா** அவர்கள் பாதிக்கப்பட்ட ஆசிரியர் மற்றும் அலுவலர்களுக்கு தார்பாய், மெழுகுவர்த்தி ஆகியவை வழங்க நிதி உதவி செய்தார். நமது பள்ளியில் உள்ள மேற்கூரையை சரி செய்ய நாகப்பட்டினம் ரோட்டரி சங்கம் உறுப்பினர் **திரு. கோவிந்தராஜலு** அவர்கள் **திரு. ஹரிபாஸ்கர்** மூலமாக தேவையான தகடுகளை தந்து உதவினார்.





- டிசம்பர் 25, 2018 பள்ளி நிறுவனர் **திரு.V. ரெங்கநாதன்** அவர்களின் நினைவுநாள் அனுசரிக்கப்பட்டது.



- ஜனவரி 06, 2019 மூன்றாம் பருவ பயிற்சி நடைப்பெற்றது. இதில் சீர்காழி மைய பயிற்சியாளர்கள் **G.ராதிகா, M.சுமதி, R.சித்ரா** ஆகியோர் கலந்துக்கொண்டு பயிற்சி அளித்தார்கள்.



- ஜனவரி 10, 2019 அன்று நம் பள்ளியின் ஒவ்வொரும் மாணவனும் ஒருகைப்பிடி பச்சரிசியும், அனைத்து ஆசிரியர்களும் கொண்டு வந்த இதர சாமன்களையும் வைத்து சமத்துவ பொங்கல் வைக்கப்பட்டு பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. மாணவர்கள் மற்றும் அனைத்து ஆசிரியர்களும் நமது பாரம்பரிய உடைகளை அணிந்துவந்திருந்தனர்.

- ஜனவரி 22, 2019 அன்று இரண்டாம் வகுப்பு மாணவர்கள் தாங்கள் கொண்டு வந்த காய்கறிகளை வைத்து காய்கறி கலவைகளை செய்து அனைவருக்கும் வழங்கினர்.

- ஜனவரி 26, 2019 நம்பள்ளியில் 70வது ஆண்டு குடியரசு தினவிழா கொண்டாடப்பட்டது. இதில் மூத்த குடிமக்கள் கலந்துக்கொண்டு சிறப்பித்தார்கள்.







- ஜனவரி 30, 2019 அன்று மாணவர்களுக்கு போக்குவரத்து விதிமுறைகளைப் பற்றி விளக்குவதற்கு **போக்குவரத்து காவலர் திரு. ராம்மோகன்** அவர்கள் வந்து மாணவர்களிடம் கலந்துரையாடினார்கள். பள்ளியின் சார்பில் பொன்னாடை போர்த்தப்பட்டது. ஹரிஷ் என்ற மாணவன் அரசுபேருந்து ஓட்டுனர்கள் ஏன் சீட்பெல்ட அணிவதில்லை? என்ற கேள்வியை கேட்டு எல்லோரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தி சிந்திக்கவும் வைத்தது.

- ஜனவரி 31, 2019 **திருமதி. பிரேமா & ஸ்ரீமதி மேடம்** அவர்கள் பள்ளிக்கு விஜயம் செய்தார்கள். மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் தேவையான ஆலோசனைகள் வழங்கினார்கள்.

- பிப்ரவரி 01, 2019 3 -ம் வகுப்பு மாணவர்கள் Nature walk செல்லும் போது **Sajeeth** என்ற மாணவன் அழகிய புதிய வகை கிளிஞ்சல் ஒன்றை கண்டெடுத்தார். அந்த கிளிஞ்சல் சுனாமியின் போது கடல்நீர் இப்பள்ளி வளாகத்தினுள் வந்ததை குறிப்பால் உணர்த்தியது.






- பள்ளியின் சார்பாக நமது பள்ளியின் நூலக ஆசிரியர் **திருமதி. அமுதா** அவர்களின் வீட்டில் நூலகம் ஒன்று அமைக்கப்பட்டது. அந்த நூலகத்தின் மூலம் நமது பள்ளியின் பழைய மாணவர்களின் தொடர்பு ஏற்பட்டுள்ளது.





பிப்ரவரி 07, 2019 பள்ளியில் 11 – ம் ஆண்டு விளையாட்டு விழா நடைப்பெற்றது. இதில் பாரம்பரிய விளையாட்டுக்களுக்கான கோலிகுண்டு, கயிறு இழுத்தல், பாண்டி, நொண்டி, கோ-கோ, பம்பரம் போன்றவை விளையாடப்பட்டன. பெற்றோர்களும் விளையாட்டில் பங்கேற்றனர். சீர்காழி மைய அலுவலர்களும் கலந்துக்கொண்டு குழந்தைகளை ஊக்குவித்தனர்.

- பிப்ரவரி 15, 2019 அன்று மாணவர்கள் நெகிழி தடையை முன்னிட்டு மாணவர்கள் அனைவரும் காகிதத்திலான உறைகளையும், பைகளையும் தயார் செய்தனர். அதனை அருகில் உள்ள கடைகள் மற்றும் மருந்தகம் போன்றவற்றிற்கு விநியோகிக்கபட்டது. இந்தாண்டிற்கான ஆண்டு விழா அழைப்பிதழ்களை மாணவர்களே தயார் செய்தனர்.



- பிப்ரவரி 23, 2019 அன்று நமது ரோட்டரி வித்யாரம்பம் பள்ளிக்கு முன்னாள் நாகை மாவட்டம் ஆட்சியரும், தற்போதைய போக்குவரத்து துறை



செயலாளருமான திரு. Dr. J. ராதாகிருஷ்ணன் அவர்கள் பள்ளிக்கு விஜயம் செய்து ஆசிரியர்களுடனும், மற்ற அலுவலர்களுடனும் கலந்துரையாடி பள்ளியின் செயல்பாடுகளை கேட்டறிந்தார். நமது ரோட்டரி வித்யாரம்பம் பள்ளி மற்றும்

Mobile Toy Library – யை முதன் முதலில் நாகப்பட்டினம் மாவட்டத்தில் துவங்கவும் அவரே முன்நின்று பல்வேறு ஏற்பாடுகளை செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

- பிப்ரவரி 26, 2019 அன்று பெற்றோர் ஆசிரியர் கூட்டம் நடைப்பெற்றது. பள்ளியில் நடைபெறவிருக்கும் ஆண்டு விழா பற்றி தெரிவிக்கபட்டது. குழந்தைகளின் படிப்பிற்காக பெற்றோர்கள் செய்ய வேண்டிய அன்றாட நடவடிக்கைகள் விளக்கி கூறப்பட்டது.

**ACADEMIC INTERVENTION FOR STUDENTS:**

| | | |
|---|---|---|
| Nature walk | - | To connect with Nature |
| Zero Periods | - | To review the concepts learnt |
| Four Corner Math activities | - | To develop critical thinking skills |
| Science Experiments | - | To have hands-on Experience |
| Mental Maths | - | To practice calculations mentally using the four basic operations in Math |
| English Grammar Activity | - | To remove the fear of English |
| Reading Time | - | To improve the reading skills |
| Question Time in Assembly | - | To independently search answers for ‘why’ questions |

**SKILL BUILDING FOR TEACHERS**

| | | |
|---|---|---|
| Micro teaching | - | To critically analyse a concept and raise questions |
| English Conversation Class | - | To improve communication skills |
| Term Training | - | To impart activity oriented teaching |

Editor: RVS Teachers
(For private circulation only)

Vidyarambam Trust
Park View Apartments, II floor,
No: 85/94, G.N.Chetty Road,
T.Nagar, Chennai – 600 017

Website: www.vidyarambam.org

Phone: 044 -28152590
Email: vidyarambam@gmail.com